# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

# வெற்றிடங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான தகுதி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. பணிப்பாளர் நாயகம் பதவி (HM 2-1) – (பதவி 01)

**தொழில் விபரம்:**

பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தின் உயர் மட்ட நிறைவேற்று அதிகாரியாவார். பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகள் மற்றும் நிர்வாகம் மற்றும் நிதி விவகாரங்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்பாவார், அவர் பணிப்பாளர் சபையின் பொதுவான வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ், சபையால் வழங்கப்படும் அதிகாரங்கள், செயற்பாடுகள் மற்றும் கடமைகளைப் பயன்படுத்துதல், செயற்படுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் மற்றும் அதிகாரபூர்வ அடைவுகள் மற்றும் தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் பரிமாற்றத்தில் சிறந்து விளங்குவதற்காக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு தலைமைத்துவத்தையும் ஊக்கத்தையும் வழங்குவார்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக நிர்வாகம், வணிக முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொருளியல், வர்த்தகம், விஞ்ஞானம் (உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், உயிரியல் விஞ்ஞானம்), விவசாயம், சட்டத் துறையில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் அல்லது பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் முகாமைத்துவத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் கூட்டு அங்கத்துவம்.

**மற்றும்**

முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 18 ஆண்டுகள் அனுபவம் அதில் முதல் பட்டத்தை பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகள் அனுபவம்.

**அல்லது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக நிர்வாகம், வணிக முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொருளியல், வர்த்தகம், விஞ்ஞானம் (உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், உயிரியல் விஞ்ஞானம்), விவசாயம், சட்டத் துறையில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் கலாநிதிப் பட்டம்

**மற்றும்**

கலாநிதிப் பட்டத்தை பெற்ற பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக அமைப்பு ஒன்றில் நிரூபிக்கப்பட்ட தளப் பதிவு ஒன்றுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம்.

**உள்ளக:**

பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை

**மற்றும்**

பல்துறை குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறன். மனிதவளம் மற்றும் ஏனைய வளங்களை முறையாக பணியமர்த்திய மற்றும் செயற்றிறன் முகாமைத்துவத்தில் அனுபவம்.

**சம்பள அளவு:**

HM 2-1: 2025 ரூபா (161,140 - 12 x 4,850 - 219,340)

(2027.01.01 இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 119,494/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின்படி 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு:**

01/2015, 01/2015(i) மற்றும் (ii)ஆம் இலக்க PED சுற்றுநிருபத்தின் குழுக்களின் எரிபொருள் கொடுப்பனவு ஒன்று மற்றும் அதிகாரபூர்வ வாகனம் ஒன்றை பயன்படுத்துவதற்கு அல்லது கிடைக்கப்பெறும் மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவை பயன்படுத்த உரித்துடையவராவார்.

**தொழில்முறை கொடுப்பனவு:**

01/2025 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின்படி தொழில்முறை கொடுப்பனவு வழங்கப்படும்.

**மற்ற கொடுப்பனவுகள்:**

சம்பளத்திற்கு மேலதிகமாக தொடர்புடைய அரச சுற்றுநிருபங்களின்படி வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் மற்ற பொருத்தமான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**வயது:**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 2. பணிப்பாளர் பதவி – சட்டம் மற்றும் அமுலாக்கல் (HM 1-1) – (பதவி 01)

**தொழில் விபரம்:**

அதிகாரசபையை எந்தவொரு நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது நிர்வாகத்தின் முன்பாகவும் பிரதிநிதித்துவப்படுத்துதல், அதிகாரசபைக்கு எதிரான வழக்கு அறிவித்தலைப் பெற்றவுடன், தேவையான நேரத்தில் அதிகாரசபையை பிரதிநிதித்துவப்படுத்துதல், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் மேற்கொள்ளும் உத்தரவு ஒன்றை பின்பற்றத் தவறும் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு எதிரான விசாரணை மற்றும் சட்டத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்டவாறு சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல், தேவைப்படும்போது சட்டமா அதிபர் திணைக்களம், மற்ற சபை மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளல், சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு எந்த ஒரு உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர் அல்லது உற்பத்தியாளர்கள் அல்லது வர்த்தகர்களின் எந்த ஒரு சங்கங்களுடன் அதிகாரசபையினால் செய்யப்படும் உடன்படிக்கைகளை தயாரித்தல் மற்றும் செயற்படுத்தவதற்காக பொறுப்பு, அதிகாரசபை மற்றும் அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்ட மற்ற சட்ட நடைமுறைகளால் வழங்கப்பட்ட அனைத்து உத்தரவுகள் தொடர்பான பதிவுகளைப் பராமரித்தல், வாடிக்கையாளர் முறைப்பாட்டுப் பரிவின் செயற்பாடுகளை கண்காணித்தல், அதிகாரசபையினால் வழங்குவதற்கு வர்த்தமானி அறிவித்தலை தயாரித்தல், அதிகாரசபையின் மாவட்ட அலுவலகத்தினால் கையாளப்படும் சட்ட விடயங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல், சட்டத்தின் செயற்பாடுகள் குறித்து ஊழியர்களுக்கு விளக்கி ஆலோசனை வழங்குதல் மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை உத்தரவுகள் மற்றும்/ அல்லது ஒழுங்குமுறைகளை விளக்குதல், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் ஏனைய பிரிவுகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் பேரவைக்கு உதவி சேவைகளை வழங்குதல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் போட்டி எதிர்ப்பு நடைமுறைகளைக் கையாளும் சர்வதேச அரங்கில் சட்ட வளர்ச்சியைப் இற்றைப்படுத்திய நிலையில் வைத்திருத்தல், அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகாரசபையின் உறுப்பினர்களுக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பான உதவிகளை வழங்குதல்.

- i. வழக்கு தொடர்பான எந்தவொரு விடயத்திலும் விளக்கம் கோரல்
- ii. விளக்கங்கள்
- iii. ஒரு ஒழுங்குபடுத்தும் அதிகாரியாக கொள்கை முடிவுகளை ஏற்பதில் தக்க கருத்தை உருவாக்குதல்
- iv. ஊழியர்கள், தொழிலாளர், நலன்புரி இழப்பீடு அல்லது ஒழுக்கம் தொடர்புபட்ட வேறு ஏதேனும் சகிப்புத்தன்மை மற்றும்
- v. அதிகாரசபையின் செயற்பாடுகள் மற்றும் நலன்களை நேரடியாக உள்ளடக்கிய வேறு ஏதேனும் மற்றும் பிற சிக்கல்கள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

சட்டத்தரணி மற்றும் சத்தியப்பிரமாணம் செய்த பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது வர்த்தக நிறுவனம் ஒன்றில் முகாமைத்துவ தரத்தில் 15 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான பட்டப்பின் பின் தகைமை (முதுமாணி) அனுபவம்.

**உள்ளக:**

பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் தரம் 1 முகாமைத்துவ பிரிவு பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**சம்பள அளவு:**

HM 1-1: 2025 ரூபா (140,640 - 15 x 4,100 - 202,140) (2027.01.01இல் இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 105,399/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு:**

01/2015, 01/2015(i) மற்றும் (ii)ஆம் ஆம் இலக்க PED சுற்றுநிருபத்தின் குழுக்களின் எரிபொருள் கொடுப்பனவு ஒன்று மற்றும் அதிகாரபூர்வ வாகனம் ஒன்றை பயன்படுத்துவதற்கு அல்லது கிடைக்கப்பெறும் மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவை பயன்படுத்த உரித்துடையவராவார்.

**தொழில்முறை கொடுப்பனவு:**

01/2025 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்தின்படி தொழில்முறை கொடுப்பனவு வழங்கப்படும்.

**மற்ற கொடுப்பனவுகள்:**

சம்பளத்திற்கு மேலதிகமாக தொடர்புடைய அரச சுற்றுநிருபங்களின்படி வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு மற்றும் மற்ற பொருத்தமான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**வயது:**

35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 3. தரவு ஒருங்கிணைப்பாளர் பதவி (MA 5-2) – (பதவி 01)

**தொழில் விபரம்:**

தரவுத் தளங்களின் தரவு இணைப்பு, பராமரிப்பு மற்றும் இற்றைப்படுத்தல், பயன்பாட்டு மென்பொருளை பயன்படுத்தி தரவுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் அறிக்கைகளை பெறுதல், இணையதளங்களை இற்றைப்படுத்தல் மற்றும் பராமரித்தல், பணிப்பாளரினால் அமர்த்தப்படும் மற்ற பணிகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து தகவல் தொழில்நுட்பம்/ தகவல் முறைமை அல்லது கணினி துறையில் இளமாணிப் பட்டம்

**மேலதிக தகைமை:**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா அனுகூலம் ஒன்றாக அமையும்.

**சம்பள அளவு:**

ஆயு 5-2: 2025 ரூபா (62,310 - 10 x 1,360 15 x 1,670 5 x 2,040 111,160)

(2027.01.01 இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 51,488/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின்படி 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**வயது:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 4. நிர்வாக அதிகாரி பதவி (MA 5-2) – (பதவி 01)

**தொழில் விபரம்:**

பொருட்கள் மற்றும் சேவைகளை பெறுவதில் உதவுதல், பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் உதவுதல், பயன்பாட்டு விலைப்பட்டியல்களை தயாரித்தல், சம்பளத் தகவல்கள், ஓய்வூதியப் பலன்கள் குறித்த அட்டவணைகள், வருகை மற்றும் விடுப்புப் பதிவுகள், போக்குவரத்துக் கட்டுப்பாடு தொடர்பான பதிவுகளைப் பராமரித்தல், வளாகத்தின் தூ ய்மையைப் பராமரித்தல் மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனித்தல், EPF/ETF, பணிக்கொடை கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய ஓய்வூதிய சலுகைகளை தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல், கடன்கள், சம்பளம் மற்றும் ஊழியர்களின் ஏனைய முற்பணங்களை செயலாக்குதல், சேவை வழங்குநர்களுடனான அனைத்து ஒப்பந்தங்களையும் செயற்படுத்துவதில் உதவுதல், அஞ்சலைக் கையாளுதல், மனிதவள முகாமைத்துவ அமைப்புகளைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல், ஊழியர்களின் பயிற்சித் தேவையை அடையாளம் கண்டு பயிற்சித் திட்டங்களை செயற்படுத்துவதில் உதவுதல், ஊழியர்கள் கலந்துகொள்ளும் பயிற்சித் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல், அனைத்து உள்ளக தேர்வுகளை நடத்துவதில் உதவுதல், ஊழியர்களின் அவ்வப்போது செயற்றிறன் மதிப்பீட்டில் உதவுதல், பணிப்பாளரால் அமர்த்தப்படும் வேறு ஏதேனும் கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வணிக நிர்வாகம்/ பொது நிர்வாகம்/ வணிக முகாமைத்துவ துறையில் இளமாணிப் பட்டம்

**மேலதிக தகைமை:**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா அனுகூலம் ஒன்றாக அமையும்.

**சம்பள அளவு:**

MA 5-2: 2025 ரூபா (62,310 - 10 x 1,360 - 15 x 1,670 - 5 x 2,040 - 111,160) (2027.01.01 இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 51,488/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**வயது:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 5. கணக்கு அதிகாரி பதவி (MA 5-2) – (பதவி 03)

**தொழில் விபரம்:**

சொத்து இயக்கப் பதிவேடுகளைப் பராமரித்தல், பட்டியல்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் சரிபார்த்தல், சம்பள அட்டவணைகள் மற்றும் ஏனைய சட்டபூர்வ கொடுப்பனவுகளைச் சரிபார்த்தல், காசு புத்தகத்தை நிர்வகித்தல், மாதாந்த கணக்குகளைத் தயாரிப்பதில் உதவுதல், மாதாந்த காசு முன்னறிவிப்பைத் தயாரிப்பதில் உதவுதல், காசோலைகளைத் தயாரித்தல், பணிப்பாளரால் அமர்த்தப்படும் வேறு ஏதேனும் கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து கணக்கியல், வர்த்தக அல்லது முகாமைத்துவம் அல்லது இளமாணிப் பட்டம் HNDA

**அல்லது**

CIMA, ICASL, ACCA, CMA அல்லது ஏதேனும் மற்ற தொழில்முறை கணக்கியல் அமைப்பில் இடைநிலை தரம்

**மேலதிக தகைமை:**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா அனுகூலம் ஒன்றாக அமையும்.

**சம்பள அளவு:**

MA 5-2: 2025 ரூபா (62,310 - 10 x 1,360 - 15 x 1,670 - 5 x 2,040 - 111,160)

(2027.01.01இல் இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 51,488/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**வயது:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 6. கிரய அதிகாரி பதவி (MA 5-2) – (பதவி 02)

**தொழில் விபரம்:**

பொருட்களின் விலை நிர்ணயத்தில் உதவுதல், குறிப்பிட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை ஒழுங்குபடுத்துவதில் உதவுதல், தரவு சேகரிப்பு மற்றும் தரவுத்தள பராமரிப்பைக் கண்காணித்தல், சர்வதேச சந்தைப் பொருட்களின் விலை மாறுபாடு குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளித்தல், செயல்திறன் ஆய்வுகளை நடத்துவதில் உதவுதல், பணிப்பாளரால் அமர்த்தப்படும் வேறு ஏதேனும் கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து கணக்கியல், வர்த்தகம் அல்லது முகாமைத்துவ அல்லது இளமாணி பட்டம் HNDA

**அல்லது**

CIMA, ICASL, ACCA, CMA அல்லது ஏதேனும் மற்ற தொழில்முறை கணக்கியல் அமைப்பில் இடைநிலை தரம்

**மேலதிக தகைமை:**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா அனுகூலம் ஒன்றாக அமையும்.

**சம்பள அளவு:**

MA 5-2: 2025 ரூபா (62,310 - 10 x 1,360 15 x 1,670 5 x 2,040 111,160)

(2027.01.01இல் இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 51,488/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின்படி 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**வயது:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 7. ஆவணப்படுத்தல் அதிகாரி பதவி (MA 5-2) – (பதவி 01)

**தொழில் விபரம்:**

ஆவணங்கள்/குறிப்புகள்/அறிக்கை தயாரிப்பதை மேற்பார்வை செய்தல், தேவையான தகவல்களைச் சேகரிக்க/ பகிர்வதற்கு ஏனைய பிரிவு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல், தேவையான அறிக்கைகளை சமர்ப்பித்தல், முறையான ஆவண அமைப்பைப் பராமரித்தல், கட்டுரைகள் மற்றும் வெளியீடுகளைத் தயாரிப்பதை ஒருங்கிணைத்தல், அறிக்கைகளை வெளியிடுவதற்கான அச்சு மற்றும் மின்னணு ஊடகப் பணியாளர்களை ஒருங்கிணைத்தல், பணிப்பாளரால் அமர்த்தப்படும் வேறு ஏதேனும் கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து ஊடகவியல் அல்லது தகவல் தொழில்நுட்பம்/ தகவல் அமைப்பு துறையில் இளமாணிப் பட்டம்.

**மேலதிக தகைமை:**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா அனுகூலம் ஒன்றாக அமையும்.

**சம்பள அளவு:**

MA 5-2: 2025 ரூபா (62,310 - 10 x 1,360 15 x 1,670 5 x 2,040 111,160)

(2027.01.01இல் இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 51,488/- (01/ 2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**வயது:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 8. சந்தைப்படுத்தல் ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் பதவி (MA 5-2) – (பதவி 01)

**தொழில் விபரம்:**

ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல், சந்தை கட்டமைப்பை அடையாளம் காண்பதில் உதவுதல், போட்டி எதிர்ப்பு நடைமுறைகள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வது, தகவல்/ ஊடக அறிக்கைகளின் அடிப்படையில் தொழில்கள் குறித்த ஆய்வுகளை நடத்துதல், போட்டித்தன்மை குறித்த அறிக்கைகளைத் தயாரிப்பதில் உதவுதல், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் சோதனைகளை நடத்துவதில் உதவுதல் மற்றும் ஒருங்கிணைத்தல், விழிப்புணர்வு மற்றும் ஆதரவு மேம்பாட்டுத் திட்டங்களில் பயன்படுத்தப்படும் கருவித்தொகுப்புகளை வடிவமைப்பதில் பங்களிப்புச் செய்தல், பணிப்பாளரால் அமர்த்தப்படும் வேறு ஏதேனும் கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பொருளியல் அல்லது சந்தைப்படுத்தல் துறையில் இளமாணிப் பட்டம்.

**மேலதிக தகைமை:**

தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா அனுகூலம் ஒன்றாக அமையும்.

**சம்பள அளவு:**

MA 5-2: 2025 ரூபா (62,310 - 10 x 1,360 - 15 x 1,670-5 x 2,040 - 111,160) (2027.01.01 இல் இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 51,488/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின் 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**வயது:**

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 9. முகாமைத்துவ உதவியாளர் பதவி (MA 1-2) – (பதவி 10)

**தொழில் விபரம்:**

அதிகாரசபையின் தகவல் தொடர்பு வலையமைப்பை திறம்பட இயக்குதல், பார்வையாளர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய தரப்பினருடன் சிறந்த பொது உறவைப் பேணுதல், வளாகத்திற்குள் உள்ள தொடர்புடைய பிரிவு/ அலகுகளுக்கு பார்வையாளர்களை வழிநடத்துதல், ஆவணங்களை சொல் செயலாக்குதல்/ தட்டச்சு செய்தல், தரவுத் தளங்களைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல், உடனடி மேற்பார்வை அதிகாரி, பிரிவுத் தலைவரின் வழிகாட்டுதலின் கீழ் கடிதப் பரிமாற்றத்தில் ஈடுபடுதல், பண உறுதிச் சீட்டு, பயணக் கோரிக்கைகள் போன்ற கணக்கியல் ஆவணங்களைத் தயாரித்தல், காசு புத்தகம் மற்றும் சில்லறை காசு புத்தகம் எழுதுதல், சம்பளங்களைத் தயாரிப்பதில் உதவுதல், மாதாந்த மற்றும் அரை ஆண்டு அறிக்கைகள் உட்பட EPF மற்றும் ETF பதிவுகளைப் பராமரித்தல், நிதி அறிக்கைகள் மற்றும் அறிக்கைகளைத் தயாரிப்பதில் உதவுதல், செலவு பகுப்பாய்வு தயாரிப்பதில் உதவுதல், கோப்பு தருணப் பதிவேடுகள் மற்றும் பதிவுகளைப் பராமரித்தல், விலை விசாரணைகளை நடத்துவதில் உதவுதல், விசாரணை நடவடிக்கைகளைத் தயாரித்தல், கோப்புகள் மற்றும் பதிவுகளைப் பராமரித்தல், கடிதங்கள், குறிப்புகள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல், தரவு அட்டவணைப்படுத்தல் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல் போன்ற செயலகப் பணிகளைச் செய்தல், களஞ்சியங்களைப் பராமரிப்பதில் உதவுதல், GRN மற்றும் அனுப்பல் அறிவிப்புகளைத் தயாரித்தல், பங்குகளைப் பெறுதல், சேமித்தல் மற்றும் வழங்குதல், பங்குப் பதிவுகள்/தொட்டி அட்டைகள்/களஞ்சியங்களின் பேரேடுகள் போன்ற பதிவுகளைப் பராமரிப்பதில் உதவுதல், பங்குகளை முறையாகப் பராமரிப்பதில் உதவுதல், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தகவல் அமைப்புகளை நிர்வகிப்பதில் உதவுதல், மென்பொருள் தொகுப்புகள்/தீர்வுகளை நிறுவுதல், வன்பொருள் மற்றும் மென்பொருளைப் பராமரித்தல், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வலையமைப்பைப் பராமரித்தல், தகவல் அமைப்புகளுக்கான பிரதான சேவையகத்தைக் கட்டுப்படுத்துதல், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தகவல் அமைப்புகளைப் புதுப்பித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றில் உதவுதல், தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப தீர்வை வாங்குவதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவிற்கு உதவுதல், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தகவல் அமைப்புகளின் முறிவுகள் குறித்து அறிக்கை அளித்தல், தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்படுத்தப்படும் நுகர்பொருட்களின் இருப்பு பதிவுகளைப் புதுப்பிப்பதில் உதவுதல், தொடர்புடைய பணிப்பாளரால் அமர்த்தப்படும் வேறு ஏதேனும் கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

(a) க.பொ.த. (சா/த) பரீட்சையில்
- i. சிங்களம்/ தமிழ்
- ii. ஆங்கில மொழி
- iii. கணிதம்

உட்பட நான்கு பாடங்களுக்காக திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(b) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சையை விட) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

**வெளிவாரி:**

பின்வரும் தகைமைகளில் சித்தி பெற்ற முதன்மை நிலை – தேர்ச்சி பெற்ற மற்றும் முதன்மை நிலை – தேர்ச்சி பெறாத பிரிவின் ஊழியர்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

**கல்வி**

க.பொ.த. (சா/த) பரீட்சையில்
- i. சிங்களம்/ தமிழ்
- ii. ஆங்கில மொழி
- iii. கணிதம்

உட்பட நான்கு பாடங்களுக்காக திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**ஏனையவை:**

மேலுள்ள பிரிவுகளில் நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

நிரந்தரப் பதவியில் நியமிக்கப்படுவதற்கு முந்தைய எந்தவொரு பணிக்காலமும் அல்லது எந்தவொரு பதவியிலும் நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்படுவதற்கு முன்நிபந்தனையாக பயிற்சியின் கீழ் முடிக்கப்பட வேண்டிய எந்தவொரு பணிக்காலமும், மேலே கூறப்பட்டுள்ளபடி தகுதிக்குத் தேவையான ஐந்து ஆண்டு சேவைக்குள் கணக்கிடப்படாது. இந்த நோக்கத்திற்காக, அமைய/ தற்காலிக அடிப்படையில் பணியாற்றிய எந்தவொரு காலத்தையும் கணக்கிடப்படாது.

**சம்பள அளவு:**

MA 1-2: 2025 ரூபா (46,220 - 10 x 540 -7 x 630 - 12 x 1080 - 12 x 1280 - 84,350) (2027.01.01இல் இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 40,403/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின்படி 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**வயது:**

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

## 10. முகாமைத்துவ உதவியாளர் பதவி (Shroff) (MA 1-2) – (பதவி 10)

**தொழில் விபரம்:**

பணம் சேகரித்தல், ரசீதுகளை வழங்குதல், காசோலைகளை ஏற்றுக்கொள்வது மற்றும் ரசீதுகளை வழங்குதல், தினசரி பணம் மற்றும் காசோலைகளை வசூலிப்பதை வங்கியில் இடல், போக்குவரத்தில் பணத்தை கையாளுதல், சில்லறை காசு கட்டுநிதி மற்றும் ஏனைய கட்டுநிதிகளை பராமரித்தல், முறையான பதிவுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல், பணம் மற்றும் காசோலைகளைப் பாதுகாப்பாகக் கையாளுதல், தொடர்புடைய பணிப்பாளரால் அமர்த்தப்படும் வேறு ஏதேனும் கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

(a) க.பொ.த. (சா/த) பரீட்சையில்
- i. சிங்களம்/ தமிழ்
- ii. ஆங்கில மொழி
- iii. கணிதம்

உட்பட நான்கு பாடங்களுக்காக திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(b) க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சையை விட) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்

(c) அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் அமைப்பு ஒன்றில் இருந்து AAT/CMA/ICASL/ CIMA இல் பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய தகைமைகள் அனுகூலங்களாகும்.

**வெளிவாரி:**

பின்வரும் தகைமைகளில் சித்தி பெற்ற முதன்மை நிலை – தேர்ச்சி பெற்ற மற்றும் முதன்மை நிலை – தேர்ச்சி பெறாத பிரிவின் ஊழியர்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

**கல்வி**

க.பொ.த. (சா/த) பரீட்சையில்
- i. சிங்களம்/ தமிழ்
- ii. ஆங்கில மொழி
- iii. கணிதம்

உட்பட நான்கு பாடங்களுக்காக திறமை சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**ஏனையவை:**

மேலுள்ள பிரிவுகளில் நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

நிரந்தரப் பதவியில் நியமிக்கப்படுவதற்கு முந்தைய எந்தவொரு பணிக்காலமும் அல்லது எந்தவொரு பதவியிலும் நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்படுவதற்கு முன்நிபந்தனையாக பயிற்சியின் கீழ் முடிக்கப்பட வேண்டிய எந்தவொரு பணிக்காலமும், மேலே கூறப்பட்டுள்ளபடி தகுதிக்குத் தேவையான ஐந்து ஆண்டு சேவைக்குள் கணக்கிடப்படாது. இந்த நோக்கத்திற்காக, சாதாரண/ தற்காலிக அடிப்படையில் பணியாற்றிய எந்தவொரு காலமும் கணக்கிடப்படாது.

**சம்பள அளவு:**

MA 1-2: 2025 ரூபா (46,220 - 10 x 540 - 7 x 630 - 12 x 1080 - 12 x 1280 - 84,350) (2027.01.01இல் இருந்து நடைமுறைக்கு வரும்)

**சம்பளம்:**

ரூபா 40,403/- (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின்படி 2025.01.01 இன்படி அடிப்படை சம்பளம்)

**வயது:**

18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**பொதுவான நிபந்தனைகள்**

**நியமன தன்மை:**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் தொடர்புடைய அரச சுற்றுநிருபங்களுக்கு உரித்துடைய நிரந்தர நியமனமாகும்.

**ஆட்சேர்ப்பில் சம்பளம்:**

வெளிவாரியாக நியமிக்கப்படுபவர்கள் சம்பள அளவின் ஆரம்பப் படியில் வைக்கப்படுவர். உள்ளக பணியமர்த்தப்படும் நபர்களின் சம்பளம் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தில் உள்ள விதியின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

பதவிக்கு தொடர்புடைய பணிகளை மேற்கொள்வதற்கும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தகுதியுடைய அபேட்சகர்கள் இந்த விளம்பரம் வெளியாகி 14 நாட்களுக்குள் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். தொடர்புடைய தகைமை அத்தாட்சி சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். அரச துறையைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். மேலுள்ள தேவைகளை உறுதி செய்யாத, முழுமை பெறாத விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆதரவு திரட்டல் தகைமை இழப்பு ஒன்றாக கருதப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**
**1 மற்றும் 2 ஆவது மாடி, CWE செயலகக் கட்டிடம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 02.**

# வெற்றிடங்கள் - ஒப்பந்த அடிப்படை

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான தகுதி பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 1. உதவி/ பிரதிப் பணிப்பாளர் பதவி (நிறுவன தொடர்பாடல்) – ஒப்பந்த அடிப்படை (MM 1-1) – (பதவி 01)

**தொழில் விபரம்:**

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் நிறுவன தொடர்பாடல் பிரிவின் தலைவர், பொது விழிப்புணர்வு, வெளியீடு மற்றும் தொடர்பாடல் குறித்த தரவு மற்றும் தகவல்களைப் பராமரித்தல், ஊடக பணியாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளுதல், ஊடகங்களுக்கான செய்திகள் மற்றும் தகவல்களை வெளியிடுவதற்குப் பொறுப்பு, ஊடக அறிக்கைகளை சமர்ப்பித்தல், பொது விழிப்புணர்வு மற்றும் ஏனைய நடவடிக்கைகள் குறித்த தகவல்களைச் சேகரிக்க உள்ளக பிரிவுகளுடன் ஒருங்கிணைத்தல், உள்ளூர் மற்றும் சர்வதேச நுகர்வோர் தொடர்பான அமைப்புடன் தொடர்பு கொள்ளுதல் மற்றும் பதிவுகளைப் புதுப்பித்தல், உள் மற்றும் வெளி தரப்பினருடன் தொடர்பை மேம்படுத்துதல், பணிப்பாளர் நாயகத்தால் அமர்த்தப்படும் வேறு ஏதேனும் கடமைகளுக்கு பொறுப்புடையவர்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வெகுசன தொடர்பால் அல்லது ஊடகத் துறையில் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனம் ஒன்றில் தொடர்புடைய துறையில் குறைந்தது 03 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**சம்பளம்**

**பணியாளர் பிரிவின் சம்பளக் குறியீடு:**

MM 1-1 சம்பள அளவின் ஆரம்பப் படிக்கு இணையான மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் 01/2025 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி குறிப்பிட்ட அளவுக்கு மற்ற தொடர்புடைய கொடுப்பனவுகள் உரித்தாகும், என்றபோதும், ஒப்பந்தக் காலம் நீட்டிக்கப்பட்டால், பணியாளரின் செயல்திறனைக் கருத்தில் கொண்டு MM 1-1 சம்பள அளவில் அதிகரிப்புக்கு தகுதி பெறுவார்.

**சம்பளம்:** ரூபா 71,730/-

01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலின் படி சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஒப்பந்தத்தை புதுப்பிப்பதை ஆண்டுதோறும் பரிசீலிக்கலாம்.

**வயது:**

30 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

## 2. ஊடக அதிகாரி பதவி – ஒப்பந்த அடிப்படை (MA 5-2) – (பதவி 01)

**தொழில் விபரம்:**

பொது விழிப்புணர்வு குறித்த அறிக்கை எழுதுதல், அறிக்கைகளை வெளியிடுவதற்காக அச்சு மற்றும் மின்னணு ஊடக பணியாளர்களுடன் ஒருங்கிணைப்பு, ஊடகங்களுக்கான செய்திகள் மற்றும் தகவல்களை வெளியிடுதல், பொது விழிப்புணர்வு மற்றும் ஏனைய நடவடிக்கைகள் குறித்த தரவு மற்றும் தகவல்களை சேகரித்தல், உள்ளக மற்றும் வெளி தரப்பினருடன் தொடர்பு, தரவு வங்கியைப் பராமரித்தல் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை குறித்த வெளியீட்டைப் பதிவு செய்தல், நிகழ்வுகளைப் பதிவு செய்ய ஒளிப்பதிவாளரை வழிநடத்துதல், உதவி பணிப்பாளர் (நிறுவன தொடர்பாடல்) அமர்த்தும் வேறு ஏதேனும் கடமைகள்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வெகுசன தொடர்பாடல் அல்லது ஊடகத் துறையில் இளமாணிப் பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா.

**சம்பளம்**

**பணியாளர் பிரிவின் சம்பளக் குறியீடு:**

MA 5-2 சம்பள அளவின் ஆரம்பப் படிக்கு இணையான மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் 01/2025 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி குறிப்பிட்ட அளவுக்கு மற்ற தொடர்புடைய கொடுப்பனவுகள் உரித்தாகும், என்றபோதும், ஒப்பந்தக் காலம் நீட்டிக்கப்பட்டால், பணியாளரின் செயல்திறனைக் கருத்தில் கொண்டு MA 5-2 சம்பள அளவில் அதிகரிப்புக்கு தகுதி பெறுவார்.

**சம்பளம்:** ரூபா 51,488/-

01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் இணைப்பு II இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலின் படி சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஒப்பந்தத்தை புதுப்பிப்பதை ஆண்டுதோறும் பரிசீலிக்கலாம்.

வயது: 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்**

**நியமன பண்பு:** ஒப்பந்த அடிப்படை

இந்தப் பதவிக்கான நியமனம் ஓர் ஆண்டு ஒப்பந்தக் காலத்தைக் கொண்டிருப்பதோடு நிரந்தர நியமனத்தைப் பெறுவதற்கு உரித்துடையதல்ல. இந்த நியமனம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையில் எந்த ஒரு நிரந்த நியமனத்திற்கும் உரிமை பெற்றதல்ல.

இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

பதவிக்கு தொடர்புடைய பணிகளை மேற்கொள்வதற்கும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தகுதியுடைய அபேட்சகர்கள் இந்த விளம்பரம் வெளியாகி 14 நாட்களுக்குள் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றனர். தொடர்புடைய தகைமை அத்தாட்சி சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும். அரச துறையைச் சேர்ந்த விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவன தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும். மேலுள்ள தேவைகளை உறுதி செய்யாத, முழுமை பெறாத விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆதரவு திரட்டல் தகைமை இழப்பு ஒன்றாக கருதப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**
**1 மற்றும் 2 ஆவது மாடி, CWE செயலகக் கட்டிடம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு 02.**